கடைசியில் தொகுப்புரை வழங்கும்போது உங்களுடைய கருத்துக்களைச் சொல்லலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் மீண்டும், மீண்டும் சொல்ல வேண்டிய தேவையை நீங்கள் உருவாக்கமாட்டீர்கள் என்று நான் நம்புகிறேன். இப்போது நீங்கள் அமர்ந்து வாதங்களைக் கேட்டு, கடைசியில் உங்கள் வாதத்தைத் தொகுப்புரை செய்ய ஒத்துழைப்பீர்கள் என்று நம்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொல்வதற்காக மிகுந்த நன்றியோடு இருக்கிறேன். தொகுப்புரையிலே இருக்கின்ற கருத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று நீங்கள் திரும்பத் திரும்ப வற்புறுத்துவது சரியல்ல. தொகுப்புரையிலே, ஆய்வுரையிலே வந்து விட்டால், நான் என்னுடைய கருத்தில், அரசாங்கம்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவர் சொல்வது சரியல்ல என்று சொன்ன பிறகு நான் உங்களை அனுமதிக்க முடியாது. அடுத்து, சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கையை மாண்புமிகு திரு. வீ. பெ. துரைசாமி, பேரவைத் துணைத் தலைவர் அவைக்கு அளிப்பார், (குறுக்கீடுகள்).

2. அறிக்கை அளித்தல்.

சட்ட விதிகள் ஆய்வுக் குழு.

மாண்புமிகு திரு. வீ. பெ. துரைசாமி : (பேரவைத் துணைத் தலைவர்.) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-90ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஆறாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன். (குறுக்கீடுகள்)

1. தகவல் கோரல்—தொடர்ச்சி.

காவல் துறை மானியக் கோரிக்கை தொடர்புடைய ஆய்வுரையில்101-வது பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு வாசகம் குறித்து—தொடர்ச்சி.